DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 57/2026

Miscellaneous :

Sessions : PW 1

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | நந்தகோபால் |
| Father / Husband Name | கதிர்வேலன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 24.07.2026

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

1. நான் வியாபாரம் செய்து காசோலைகளை பயன்படுத்திவருவதால் காசோலைகள் பற்றிய விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வழக்கு காசோலைதான் எதிரி எனக்கு வழங்கிய காசோலை. இந்த வழக்கு காசோலையில் 18 டிசம்பர் 2018 என்று அச்சிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த காசோலையை தான் அவர் கொடுத்தார். அந்த காசோலையில் நந்தகோபால் என்று தான் எழுதப்பட்டுள்ளது என்றாலும், அதில் தகப்பனார் பெயரோ, ஊர் பெயரோ இல்லை என்றால் சரிதான். இந்த காசோலை வழங்கியதற்கு எந்த சாட்சியமும் இல்லை என்றால் சரியல்ல. தண்டபானி அவருடன் வந்தபோது தான் கொடுத்தார். வழக்கு காசோலையில் கையொப்பத்திற்கும் மற்ற விவரங்கள் நிரப்பப்பட்டதற்கும் வித்தியாசங்கள் உள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. நான் முதலில் கொடுத்த தொகைக்கும் இரண்டாவது கொடுத்த தொகைக்கும் நேரம் என்ன என்றால் எனக்கு பணம் கொடுத்த நேரம் ஞாபகமில்லை.

2. நான் இரண்டு தொகையையும் சேர்த்து ரூ.6 லட்சம் பணம் கொடுத்தேன் என்று என்னுடைய அறிவிப்பு மற்றும் புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். என்னுடைய முதல் விசாரணையிலும் நான் எதிரிக்கு ஒரே தேதியில் ரூ.6 லட்சம் கொடுத்துள்ளேன் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. நான் என்ன தொழில் செய்கிறேன், எனக்கு எவ்வளவு ரூபாய் வருமானம் வருகிறது என்பதை காட்ட ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய மனைவியின் நகைகளை அடகு வைத்து தான் மேற்படி தொகைகளை கொடுத்தேன் என்பதை காட்ட நான் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் நகையை அடகு வைத்து கொடுத்தேன் என்று என்னுடைய புகாரிலும் சொல்லவில்லை என்றால் நான் நகையை வைத்து தொழில் செய்வதாக தான் சொன்னேன்.

3. எதிரி அளித்த பதில் அறிவிப்புக்கு என்னுடைய புகாரிலோ, முதல் விசாரணையிலோ எவ்வித மறுப்பும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான்.

12.02.2025 அன்று எதிரி பணம் கேட்டார் என்று என்னுடைய புகார், அறிவிப்பு மற்றும் முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். 12.02.2025 முதல் காசோலை வழங்கிய தேதிவரை இடைப்பட்ட காலத்திற்கு நான் எதிரியிடம் எந்த ஆவணமும் எழுதி வாங்கவில்லை என்றால் சரிதான். நான் ஏன் இடைப்பட்ட காலத்திற்கு வட்டி வாங்கவில்லை என்று என்னுடைய அறிவிப்பிலும், புகாரிலும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். எனக்கும் எதிரிக்கும் எந்தவித சம்மந்தமும் கிடையாது என்றாலும், நான் அவருக்கு எந்த தொகையும் கடனாக கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. தண்டபாணிக்கும் எதிரிக்கும் தான் பற்று வரவு உள்ளது என்றாலும், 2019 ம் காலக்கட்டத்தில் எதிரி தண்டபாணியிடம் கொடுத்த காசோலையை வைத்து நாங்கள் கொள்ளை லாபம் அடையவேண்டும் என்று இருவரும் கூட்டாக சேர்ந்து பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

4. இந்த வழக்கு தாக்கல் செய்தது முதல் தண்டபாணி எத்தனை முறை நீதிமன்றத்திற்கு வந்துள்ளார் என்றால் அவர் வரவில்லை. நாங்கள் இருவரும் சேர்ந்து தவறாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யதக்க வழக்கு என்றால் சரியல்ல.